சுருக்கம்

வேளாண்மை – 2020–2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட உழவர்–அலுவலர் தொடர்புத் திட்டத்தை வேளாண்மை மற்றும் தோட்டக்கலை (ம) மலைப்பயிர்கள் துறைகளில் செயல்படுத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (வே.உ.2) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2051, சார்வரி, கார்த்திகை 2 ஆம் நாள்

அரசாணை (நிலை) எண்.264 நாள்: 17.11.2020

படிக்கப்பட்டவை:

1. வேளாண்மை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கடித எண். ஆத்மா 2 / 22134 /2020, நாள் 26.5.2020 மற்றும் 1.9.2020.
2. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கடித எண்.பல்வகை/ 8462 /2020, நாள் 19.06.2020.

---------

ஆணை:

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், 2020–2021 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையின் போது, உழவர்களுக்கும் விரிவாக்க அலுவலர்களுக்கும் உள்ள தொடர்பை வலுப்படுத்தும் விதமாக ஓர் அறிவிப்பினை வெளியிட்டார்கள். அந்த அறிவிப்பு பின்வருமாறு:

*“வேளாண் துறையில் விரிவாக்கப் பணிகளை வலுப்படுத்த குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் வலுப்படுத்த வேண்டும் என விவசாயிகள் கோரி வருகின்றனர். ஏற்கனவே உள்ள அலுவலர்களை தக்க முறையில் பயன்படுத்தி, வேளாண் நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை விவசாயிகள், துறை அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பெறுவதற்கு “உழவர் – அலுவலர் தொடர்புத் திட்டத்தை” அரசு அறிமுகம் செய்யும். வேளாண் துறை அதிகாரிகள் விளை நிலங்களுக்கே சென்று விவசாயிகளைச் சந்தித்து ஆலோசனைகளை வழங்குவதுடன், தகவல் தொழில்நுட்ப உத்திகளும் இதன் பொருட்டு பயன்படுத்தப்படும்”.*

2. நவீன வேளாண் சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் உழவர் நலன் காக்கும் மானியத் திட்டங்களை விவசாயிகளிடையே உரிய நேரத்தில் கொண்டு சேர்ப்பதில் வேளாண் விரிவாக்க சேவை முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், பயிர் சாகுபடி நிலவரம் குறித்த தகவல்களை அவ்வப்போது சேகரித்து, அதற்கேற்றாற்போல் விவசாயிகளுக்கு அறிவுரைகள் வழங்குவது விரிவாக்கப் பிரிவின் முக்கியப் பொறுப்பாகும். தற்போது, உதவி வேளாண்மை அலுவலர்கள் / உதவி தோட்டக்கலை அலுவலர்கள் / வேளாண்மை அலுவலர்கள் / தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் இதர அலுவலர்கள் கிராமங்களுக்குச் சென்று, விவசாயிகளுடனான கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல், விவசாயிகளின் வயல்களில் தொழில்நுட்ப செயல் விளக்கங்களை நடத்துதல், விவசாயிகளுக்குப் பயிற்சி மற்றும் கண்டுணர் சுற்றுலா ஏற்பாடு செய்தல், கூட்டங்கள், பண்ணைப் பள்ளிகள், பல்வேறு திட்டங்களை செயல்படுத்துதல் குறித்து விவசாயிகளுடன் கலந்து உரையாடுதல் மற்றும் நவீன தொழில்நுட்பத்தினை விவசாயிகளுக்குத் தெரியப்படுத்துதல் போன்ற பலவிதமான விரிவாக்கப் பணிகளை வேளாண்மைத் துறை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம், விரிவாக்க அலுவலர்கள், விவசாயிகளையும், விவசாயிகள் குழுக்களையும்

நிரந்தரப் பயணத்திட்டத்தின்படி சந்திக்கிறார்கள். விவசாயிகளுடனான தொடர்பினை வலுப்படுத்தவும், அலுவலர்கள் உழவர்களை தொடர்பு கொள்ளும் நாட்கள் குறித்து விவசாயிகளிடையே வெளிப்படையாகத் தெரியப்படுத்தவும், வேளாண் விரிவாக்க செயல்பாடுகள் குறித்த நிரந்தரப் பயணத்திட்டத்தை வகுத்து, விவசாயிகள் பயன்பெறும் வகையிலும் அலுவலர்களின் விரிவாக்கப் பணிகளை மேலும் நெறிப்படுத்துவது மிகவும் அவசியமாகிறது.

3. உழவர்–அலுவலர் தொடர்புத் திட்டமானது, வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை பிரிவுகளுக்கென ஒரு பொதுவான கொள்கையை வகுத்து, அதனை ஒரே நேரத்தில் செயல்படுத்தும் வகையில், விரிவான திட்டக்கருத்துரு தயாரிக்கப்பட்டுள்ளது.

4. இக்கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, வேளாண்மை துறையின் கீழ் இயங்கும் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பிரிவுகளில், உழவர்--அலுவலர் தொடர்புத் திட்டத்தினை இணைப்பில் கண்டுள்ளவாறு செயல்படுத்திட வேண்டும் என்று ஆணையிடுகிறது. இத்திட்டத்தின் விரிவான வழிமுறைகள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

5. இத்திட்டத்தினை செயல்படுத்துதல் குறித்து, இதற்கென வெவ்வேறு நிலைகளில், தனியாக அலுவலர்களை நியமித்து, கண்காணிக்க வேண்டும் என்றும், இத்திட்டத்தினை உடனடியாக செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறும், வேளாண்மைத் துறை இயக்குநர் மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6. இவ்வரசாணை, நிதித்துறையின் 31/10/2020 ஆம் நாளிட்ட அ.சா.எண்.3981/FS/P/2020–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சென்னை–5.
தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர், சென்னை–5.
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், சென்னை–32.
தலைமைப் பொறியாளர் (வேளாண் பொறியியல் துறை), சென்னை–32.
சர்க்கரைத்துறை ஆணையர், சென்னை–32.
செயல் இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, சென்னை–32.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்–3.
விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்குநர், கோயம்புத்தூர்–13.
<u>நகல்:–</u>
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர், சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

17/11/2020
பிரிவு அலுவலர்.
17/11/2020

## இணைப்பு

**(அரசாணை (நிலை) எண். 264, வேளாண்மை (வே.உ.2) துறை, நாள் 17.11.2020)**

**உழவர் – அலுவலர் தொடர்பு திட்டத்தை வலுப்படுத்துதல்**

### I. அறிமுகம்

நவீன வேளாண் பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் உழவர் நலன் காக்க அரசால் செயல்படுத்தப்படும் மானியத் திட்டங்களை விவசாயிகளிடையே உரிய நேரத்தில் கொண்டு சேர்ப்பதில் வேளாண் விரிவாக்க சேவை முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் பயிர் சாகுபடி குறித்த தகவல்கள் அவ்வப்போது சேகரிக்கப்பட்டு அதற்கேற்றாற்போல் விவசாயிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

### II. அறிவிப்பை செயல்படுத்தும் முறைகள்:

புதியதாக உருவாக்கப்பட்டுள்ள "உழவர் – அலுவலர் தொடர்பு திட்டத்தின்" மூலம் உதவி வேளாண்மை அலுவலர்கள் / உதவி தோட்டக்கலை அலுவலர்கள் / வேளாண்மை அலுவலர்கள் / துணை வேளாண்மை அலுவலர்கள் / தோட்டக்கலை அலுவலர்கள் / துணை தோட்டக்கலை அலுவலர்கள் / வேளாண்மை உதவி இயக்குநர் / தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் கிராம ஊராட்சிகளுக்கு நேரடியாக சென்று விவசாயிகளை சந்திக்கும் பயணத் திட்டத்தின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட உள்ளது.

ஒவ்வொரு கிராம ஊராட்சிகளிலும் குறைந்தபட்சம் 10 முன்னோடி விவசாயிகளை தெரிவு செய்து ( ஆதி திராவிடர் / பழங்குடியின விவசாயிகள் 2 பேர் உட்பட), அவர்களுக்கு பல்வேறு நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் அரசு மானியத் திட்டங்கள் குறித்த விளக்கங்களும், பயிற்சிகளும் உரிய கால இடைவெளியில் தொடர்ந்து வழங்கப்பட உள்ளது.

பயிற்சி பெற்ற முன்னோடி விவசாயிகள், வேளாண்மை / தோட்டக்கலை துறைக்கும் மற்ற விவசாயிகளுக்கும் இடையே பாலமாக இருந்து செயல்பட வேண்டும்.

"அலுவலர்கள் கிராம ஊராட்சிகளுக்கு செல்வதையும், முன்னோடி விவசாயிகளுக்கு வேளாண் தகவல்கள் பரிமாறப்படுவதையும்" நவீன தகவல் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தொடர்ந்து கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### III. வட்டார அளவிலான விரிவாக்க குழுவை அமைத்தல்

வேளாண்மை உதவி இயக்குநரின் தலைமையில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக விஞ்ஞானி, வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு **"வட்டார வேளாண் விரிவாக்க குழு"** ஏற்படுத்தப்படும். இதே போன்று, தோட்டக்கலை உதவி இயக்குநரின் தலைமையில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக விஞ்ஞானி, தோட்டக்கலை அலுவலர்,

துணை தோட்டக்கலை அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு "வட்டார தோட்டக்கலை விரிவாக்க குழு" அமைக்கப்படும்.

**வட்டார அளவிலான விரிவாக்க குழுவின் செயல்பாடுகள் பின்வருமாறு;**

**1. <u>கிராம ஊராட்சிகளை ஒதுக்கீடு செய்தல்</u>**

வட்டார வேளாண் விரிவாக்க குழுவானது ஏற்கெனவே உதவி வேளாண்மை அலுவலர்கள் / வேளாண்மை அலுவலர்கள் / துணை வேளாண்மை அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளை மறு ஆய்வு செய்து, உதவி வேளாண்மை அலுவலர்கள் வாரியாக ஒதுக்கீடு செய்து, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநரின் ஒப்புதலைப் பெற வேண்டும். இதேபோல், வட்டார தோட்டக்கலை விரிவாக்க குழு உதவி தோட்டக்கலை அலுவலர்களுக்கு கிராம ஊராட்சிகளை ஒதுக்கீடு செய்து தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநரின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

**2. <u>கிராம ஊராட்சி வாரியாக பயணத் திட்டத்தினை நிர்ணயித்தல்</u>**

வேளாண்மை மற்றும் தோட்டக்கலையைச் சார்ந்த அனைத்து களப்பணியாளர்களின் கிராம ஊராட்சி வாரியான பயணத்திட்டத்தை வேளாண் மற்றும் தோட்டக்கலை குழு ஒவ்வொரு மாதமும் நிர்ணயம் செய்ய வேண்டும்.

உதவி வேளாண்மை அலுவலர்கள் / உதவி தோட்டக்கலை அலுவலர்கள் குறைந்தபட்சம் இரண்டு வாரத்திற்கு ஒரு முறையாவது ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் நேரில் சென்று, விவசாயிகளை சந்தித்து ஆலோசனைகள் வழங்க வேண்டும். அதே போன்று, வேளாண்மை அலுவலர்கள் / துணை வேளாண்மை அலுவலர்கள் / தோட்டக்கலை அலுவலர்கள் / துணை தோட்டக்கலை அலுவலர்கள் மாதத்திற்கு ஒரு முறையாவது ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் நேரில் செல்ல வேண்டும். அலுவலர்கள் தங்களது பயண திட்டத்தை மேற்கொள்ளும் போது, அந்தந்த ஊராட்சிகளுக்கான அப்போதைய தேவை மற்றும் பயிர் சாகுபடி நிலையை கருத்திற் கொண்டு பயணத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

பயணத்திட்டம் **6** மாதத்திற்கு ஒருமுறை ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் **1** ஆம் தேதி மற்றும் அக்டோபர் **1** ஆம் தேதிக்கு முன்பாக வகுத்திட வேண்டும். தேதி வாரியான பயணத்திட்டம் உழவன் செயலியில் விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில் பதிவேற்றம் செய்திட வேண்டும்.

**3. <u>மாதாந்திர வேளாண் செய்தியை தயாரித்தல்</u>**

மாவட்ட வேளாண் இணை இயக்குநர் / தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர்களை கலந்து ஆலோசித்து வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர் சாகுபடிக்கு தேவையான மாதாந்திர தொழில்நுட்ப செய்தியை வட்டாரக்குழு தயாரித்திட வேண்டும்.

**4. திட்டமிடப்பட வேண்டியவை**

i. ஒவ்வொரு மாதத்திலும் மேற்கொள்ள வேண்டிய வேளாண் விரிவாக்க பணிகள்.

ii. உதவி வேளாண்மை அலுவலர் / வேளாண்மை அலுவலர் (அல்லது) உதவி தோட்டக்கலை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர்களை கலந்தாலோசித்து, செயல் விளக்கத்திடல் அமைப்பதற்கு விவசாயிகளை முடிவு செய்தல்.

iii. கிராம ஊராட்சி வாரியாக, விவசாயிகள் பயிற்சிக்கான அட்டவணையை நிர்ணயம் செய்தல்.

iv. விவசாயிகளுக்கான கண்டுணர் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தல்.

v. அந்த மாதத்தில், பண்ணைப் பள்ளி அமைப்பதற்கான தேதிகளையும், பயனாளிகளின் பெயர்களையும் முடிவு செய்தல்.

**5. விரிவாக்க அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல்**

ஒவ்வொரு மாதமும் பரவலாக்கப்பட வேண்டிய தொழில்நுட்பங்கள் பற்றியும், திட்டங்களின் பயன்கள் பற்றியும், உதவி வேளாண்மை அலுவலர்கள் / உதவி தோட்டக்கலை அலுவலர்கள் / வேளாண்மை அலுவலர்கள் / துணை வேளாண்மை அலுவலர்கள் / தோட்டக்கலை அலுவலர்கள் / துணை தோட்டக்கலை அலுவலர்கள் ஆகியோரை அறியச் செய்தல். பிரதி வெள்ளிக்கிழமை அன்று, அரைநாள் பயிற்சியும், அரைநாள் ஆய்வுக் கூட்டமும் வட்டாரக்குழு நடத்த வேண்டும்.

## IV. முன்னோடி விவசாயிகளைக் கண்டறிதல்

முன்னோடி விவசாயி என்பவர், தானே முன் வந்து புதிய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வதிலும், பின்பற்றுவதிலும் ஆர்வமும் ஈடுபாடும் உள்ளவராவர்.

அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட முன்னோடி விவசாயி, நல்ல பேச்சுத்திறனுடன் தலைமைப் பண்புகள் உள்ளவராகவும், விவசாயிகளுடனும், அரசு அலுவலர்களுடனும் நல்லுறவைப் பேணுபவராகவும் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு கிராம ஊராட்சிகளிலும் 10 முன்னோடி விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு வேளாண்மைத் துறையின் பல்வேறு தொழில்நுட்பங்களில் பயிற்சி அளிக்க வேண்டும். அதேபோல் தோட்டக்கலையிலும் 10 முன்னோடி விவசாயிகளை தெரிவு செய்து பயிற்சி அளிக்க வேண்டும். இம்முன்னோடி விவசாயிகள் துறையினால் அளிக்கப்படும் தொழில்நுட்பங்களை அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளுக்கு கற்றுத் தர வேண்டும். இத்திட்டத்தில் இணைந்து கொள்ள அதிகளவில் முன்னோடி விவசாயிகள் விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் இவர்களை தெரிவு செய்ய வேண்டும். கூட்டுப்பண்ணையம், நீர்வள நிலவள திட்டம் போன்ற பிற திட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட நல்ல பேச்சுத் திறன் மற்றும் தலைமைப் பண்புகளுடைய முன்னோடி விவசாயிகளையும் இதில் இணைத்துக் கொள்ளலாம். முன்னோடி விவசாயிகளைத் தெரிவு செய்ய அட்மா

திட்டத்தில் உள்ள ஆர்வமுள்ள உழவர் நண்பர்களையும் முன்னோடி விவசாயிகளாக தெரிவு செய்யலாம்.

தெரிவு செய்யப்படும் 10 முன்னோடி விவசாயிகளில் குறைந்தபட்சம் இருவர், ஆதி திராவிடர் / பழங்குடியினர் பிரிவைச் சார்ந்தவராக இருக்குமாறு தெரிவு செய்ய வேண்டும். மேலும், கிராம ஊராட்சியின் மக்கள்தொகைக்கேற்ப அவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொள்ளலாம்.

## V.விரிவாக்க அலுவலர்களுக்கான கிராம ஊராட்சிகள் ஒதுக்கீடு

உதவி வேளாண்மை அலுவலர்கள் / உதவி தோட்டக்கலை அலுவலர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் தொடர்ந்து பயணம் மேற்கொள்ளும் விதமாக, கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை, கிராமங்களின் பயிர்ப்பரப்பளவு, வட்டாரத்தில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர்கள் / உதவி தோட்டக்கலை அலுவலர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், உதவி வேளாண்மை அலுவலர்கள் / உதவி தோட்டக்கலை அலுவலர்களுக்கு கிராம ஊராட்சிகளை ஒதுக்கீடு செய்ய வேண்டும். நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகள், சாகுபடி இல்லாத கிராம ஊராட்சிகளுக்கு உதவி வேளாண்மை அலுவலர்கள் / உதவி தோட்டக்கலை அலுவலர்கள் தனியாக பயணம் மேற்கொள்ளாமல் அருகில் உள்ள கிராம ஊராட்சிகளுடன் இணைத்து பார்வையிட வேண்டும். ஒவ்வொரு உதவி வேளாண்மை அலுவலர்கள் / துணை வேளாண்மை அலுவலர்கள் / உதவி தோட்டக்கலை அலுவலர்கள் / துணை தோட்டக்கலை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பயண விபரங்களை, வட்டார அளவிலான வட்டார விரிவாக்கக் குழு முடிவு செய்து அதை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை, அந்த வட்டார உதவி இயக்குநர் அவர்களது செயல்முறை ஆணைகள் மூலம் சம்பந்தப்பட்ட விரிவாக்க அலுவலர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். மேலும், ஒவ்வொரு உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராமங்களின் பட்டியலை கணினியில் பதிவேற்றம் செய்து, விரிவாக்கப் பணிகளைக் கண்காணிப்பதற்காக, அத்தகவல்களை உழவன் செயலி / வேளாண்மைத்துறை வலைதளத்தின் மூலம் அறிந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

## VI. உதவி வேளாண்மை அலுவலர்கள் / துணை வேளாண்மை அலுவலர்கள் / வேளாண்மை அலுவலர்கள் / உதவி தோட்டக்கலை அலுவலர்கள் / தோட்டக்கலை அலுவலர்கள் / துணை தோட்டக்கலை அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கான பயணத் திட்டம்

i. உதவி இயக்குநரின் கீழ் பணியாற்றும் அனைத்து அலுவலர்களும் விரிவாக்கப் பணிகளை வாரத்தில் 4 நாட்களாவது மேற்கொள்ள வேண்டும். கிராமங்களுக்குச் செல்வதுடன், அவர்கள் தங்களது வட்டார அலுவலகத்தில் செய்ய வேண்டிய பணிகளை மேற்கொள்ள வட்டார உதவி இயக்குநர் அலுவலகத்திற்கும் செல்ல வேண்டும்.

**iii. விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளும் நேரம்**

விரிவாக்கப் பணியாளர்கள், காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை கிராமத்தில் இருக்கும் வண்ணம் பயண நேரத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். கிராம வருகைகளின் போது, கீழ்க்காணும் பணிகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் / உதவி தோட்டக்கலை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

1. **வயல் ஆய்வு**

கிராமத்திற்கு வருகை புரியும் நாளில் விரிவாக்க அலுவலர், வேளாண்/தோட்டக்கலைப் பயிர்களின் நிலை, பின்பற்றப்பட்ட தொழில் நுட்பங்கள், கடைப்பிடிக்கப்பட வேண்டிய தொழில் நுட்பங்கள், பூச்சி நோய் தாக்குதல் நிலவரம் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ள வயலாய்வு மேற்கொள்ள வேண்டும்.

2. **முன்னோடி விவசாயிகள் மற்றும் பிற விவசாயிகளை சந்தித்தல் :**

கிராம ஊராட்சியில் உள்ள முன்னோடி விவசாயிகளுடன் பிற விவசாயிகளையும் சந்திக்க வேண்டும். பயிர், பூச்சி மற்றும் நோய் தாக்குதல், உரமிடுதல் மற்றும் இதர சாகுபடிப் பணிகள் தொடர்பான பிரச்சனைகள் பற்றி விவசாயிகள் யாராவது தகவல் தெரிவித்தால், அந்த விவசாயிகளையும் அதே நாளில் சந்தித்து, உரிய பரிந்துரைகளை வழங்க வேண்டும்.

3. **விவசாயிகளுக்கு பயிற்சி:**

எதிர்வரும் பதினைந்து நாட்களில் அவ்விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பங்களை பயிற்றுவிக்கவேண்டும். வேளாண்மை / தோட்டக்கலையுடன், வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை மற்றும் அதன் சார்பு துறைகளில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் கீழ் வரும் பல்வேறு இனங்களின் பயன்களை விரிவாக்க அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும்.

4. **வானிலை முன்னறிவிப்பு:**

பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வானிலை முன்னறிவிப்பு பற்றிய விவரங்களையும் விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும்.

5. **கிராம ஊராட்சியின் கீழ் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் பயணம் மேற்கொள்ளுதல் :**

ஒரே நாளில் ஒன்றுக்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகள் ஒதுக்கப்பட்டிருப்பின், உதவி வேளாண்மை அலுவலர், உதவி தோட்டக்கலை அலுவலர், வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர் மற்றும் தோட்டக்கலை அலுவலருக்கு அந்நாளில் ஒதுக்கப்பட்ட

ii. விரிவாக்க அலுவலர்கள், தங்களது கிராமப் பயணங்களை பொதுவாக, திங்கள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாட்களில் மேற்கொள்ள வேண்டும்.

iii. வெள்ளிக்கிழமை அன்று ஆய்வுக் கூட்டங்கள், புதிய தொழில்நுட்ப பயிற்சிகள் ஆகியவற்றை மேற்கொள்ள ஒதுக்க வேண்டும்.

iv. கிராம ஊராட்சி பயணத்தில், எவ்வித மாற்றமுமில்லாமல் உதவி வேளாண்மை அலுவலர்கள் / துணை வேளாண்மை அலுவலர்கள் / வேளாண்மை அலுவலர்கள் / தோட்டக்கலை அலுவலர்கள், தேவைப்படின் அவசரப் பணிகளை மேற்கொள்ள வட்டார அலுவலகத்திற்கு மாலை 3 மணிக்கு மேல் பயணம் மேற்கொள்ளலாம்.

VII. <u>நிர்ணயிக்கப்பட்ட தேதிகளில் கிராம ஊராட்சிகளுக்கு பயணம் மேற்கொள்ளல்:</u>

i. <u>கிராம ஊராட்சிகளுக்கு பயணம் மேற்கொள்ளும் நாட்களை அனைவரும் அறியச் செய்தல்</u>

உதவி வேளாண்மை அலுவலர்கள் / துணை வேளாண்மை அலுவலர்கள் / வேளாண்மை அலுவலர்கள் / உதவி தோட்டக்கலை அலுவலர்கள் / துணை தோட்டக்கலை அலுவலர்கள் / தோட்டக்கலை அலுவலர்கள் கிராமங்களுக்கு வருகை புரியும் நாட்களை முன்னோடி விவசாயிகள் மூலம் அனைத்து விவசாயிகளுக்கும் தெரியப்படுத்துவதோடு, பரவலாக அனைவரும் அறியும் வண்ணம் விளம்பரம் செய்ய வேண்டும்.

ii. <u>தொடர்பு மையங்கள்</u>

ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் ஒரு தொடர்பு மையம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். **அது தொடக்க வேளாண்மை கூட்டுறவுக்கடன் சங்கம் / அரசு அலுவலகம் / கிராம பொதுக் கட்டடங்கள், இடங்கள் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றாக இருக்க வேண்டும்.** பொதுவான கூடும் இடம் கிடைக்காத பட்சத்தில், சுழற்சி முறையில் முன்னோடி விவசாயிகளின் இடங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலரும் அவ்வார நாட்களில் கூடும் இடம் பற்றிய தகவல்களை 'வாட்ஸ்ஆப்' அல்லது பிற சமூக வலைதளங்கள் மூலம் அனைத்து விவசாயிகளுக்கும் வார ஆரம்பத்திலேயே தெரிவித்து விட வேண்டும். கிராம வாரியான தொடர்பு மைய விபரங்களடங்கிய பட்டியல்களை கணினியில் பதிவு செய்து, ஒவ்வொரு வட்டார, மாவட்ட, மாநில அளவிலான அலுவலகங்களிலும் பராமரிக்க வேண்டும். குறிப்பிட்ட நாட்களில், அனைத்து உதவி வேளாண்மை அலுவலர்கள் / துணை வேளாண்மை அலுவலர்கள் / வேளாண்மை அலுவலர்கள் / உதவி தோட்டக்கலை அலுவலர்கள் / துணை தோட்டக்கலை அலுவலர்கள் / தோட்டக்கலை அலுவலர்கள் குறிப்பிட்ட கிராமங்களுக்குச் சென்று குறிப்பிட்ட தொடர்பு மையத்தில் அனைத்து முன்னோடி விவசாயிகளையும் சந்திக்க வேண்டும். விருப்பமுள்ள இதர விவசாயிகளும் தொடர்பு மையத்தில் கலந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் நேர ஒதுக்கீடு செய்து, விரிவாக்க அலுவலர்கள் கண்டிப்பாக பயணம் மேற்கொள்ள வேண்டும்.

6. <u>பயண விபரங்களை குறிப்பெடுத்தல்:</u>

உதவி வேளாண்மை அலுவலர், உதவி தோட்டக்கலை அலுவலர்கள் தங்களது பயணம் தொடர்பாக சந்தித்த விவசாயிகள் மற்றும் பயண விபரங்களை குறிப்பேட்டில் பதிவிட வேண்டும். மேலும், வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் அல்லது தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் கிராமங்களுக்குப் பயணம் மேற்கொள்ளும்போது, உதவி வேளாண்மை/ தோட்டக்கலை அலுவலர்கள் குறிப்பெடுத்த குறிப்பேட்டில் மேலொப்பமிட வேண்டும்.

7. <u>விடுபட்ட கிராம ஊராட்சிகளுக்கு வருகை புரிதல்:</u>

விடுமுறை அல்லது தற்செயலான பிற நிகழ்வுகளில் உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் / வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் மற்றும் தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் அட்டவணையின்படி வருகை புரிய இயலாத கிராம ஊராட்சிகளுக்கு வார இறுதிநாளான சனிக்கிழமைகளில் பயணம் மேற்கொள்ள வேண்டும்.

8. <u>விவசாயிகளுடன் கலந்தாய்வு:</u>

வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் மற்றும் தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்களும் வட்டார குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள (உழவன் செயலியில் இணைக்கப்பட்டுள்ள) அட்டவணையின்படி உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர்களுடன் கிராமங்களுக்குச் செல்ல வேண்டும். முன்னோடி விவசாயிகள், செயல்விளக்கத் திடல்கள் அமைத்துள்ள பயிற்சி விவசாயிகள், பண்ணைப்பள்ளி விவசாயிகளுடன் கலந்தாய்வு மேற்கொள்ள வேண்டும். வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் மற்றும் தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர் ஆகியோர் உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் ஆகியோரது களப்பணிகளை மேற்பார்வையிடுவதுடன் கிராம ஊராட்சிகளில் களப்பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**VII (அ)** <u>சமூக ஊடகங்கள் மூலம் விவசாயிகளுடனான தொடர்பை வலுப்படுத்துதல்:</u>

உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் வாட்ஸ்ஆப் (Whatsapp) மற்றும் இதர சமூக ஊடகங்கள் மூலம் குழுக்களை உருவாக்கி முக்கியமான தொழில்நுட்பங்கள் தொடர்பான செய்திகளை விவசாயிகள் அறிந்திடச் செய்தல் வேண்டும். வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் மற்றும் தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை

அலுவலர்களும், அக்குழுக்களில் இடம் பெற்றிருக்க வேண்டும். வேளாண்மை உதவி இயக்குநர்களும், வட்டார அளவில் முன்னோடி விவசாயிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் இதுபோன்ற குழுக்களை உருவாக்க வேண்டும்.

**<u>VIII. உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் மற்றும் வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர்கள் மேற்கொள்ளும் களப் பயணங்களை கண்காணித்தல்:</u>**

விரிவாக்கப் பணியின் திறனை மேம்படுத்த, உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர், வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் மற்றும் தோட்டக்கலை அலுவலர் / துணை தோட்டக்கலை அலுவலர்கள் மேற்கொள்ளும் பயணங்கள் மற்றும் விவசாயிகளுடனான தொடர்பு ஆகியவை தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட வேண்டும். வட்டார அளவில் வேளாண்மை உதவி இயக்குநர், மாவட்ட அளவில் வேளாண்மை துணை இயக்குநர் மற்றும் வேளாண்மை இணை இயக்குநர், மண்டல அலுவலர்கள் மற்றும் வேளாண்மை இயக்குநரக அலுவலர்கள் மூலம் களப்பணிகள் முறையாக நடைபெறுவதை கண்காணிக்கப்படுவது உறுதி செய்யப்படும். விரிவாக்கப் பணிகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு இரு வழிகளில் கண்காணிக்கப்படும்.

**அ) <u>உதவி இயக்குநர்கள் / துணை இயக்குநர்கள் / இணை இயக்குநர்களின் களப் பயண கண்காணிப்பு</u>**

1. **விரிவாக்க அலுவலர்களின் பயண நாட்குறிப்பு:** உதவி வேளாண்மை அலுவலர்கள் /உதவி தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் / தோட்டக்கலை அலுவலர்கள் / துணை வேளாண்மை அலுவலர்கள் / துணை தோட்டக்கலை அலுவலர்களின் பயண விபரங்களை ஒவ்வொரு கிராம ஊராட்சி வாரியாக தனித்தனி பக்க உள்ளீடுகளைக் கொண்ட பயண நாட்குறிப்பு சம்மந்தப்பட்ட உதவி இயக்குநரால் மேற்பார்வையிடப்பட வேண்டும். அனைத்து வயலாய்வு தொடர்பான விரிவாக்க அலுவலர்களின் பதிவுகள், பூச்சி மற்றும் நோய் தாக்குதல், சந்தித்த விவசாயிகள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆலோசனைகள் போன்ற பணிகள் மேற்பார்வை அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டு, களப்பயணங்களின் போது மேலொப்பமிடப்பட வேண்டும்.
2. **உதவி இயக்குநர்:** வாரத்தில் 3 நாட்களாவது களப்பயணம் மேற்கொள்ள வேண்டும். உதவி இயக்குநர் ஒரு நாளில் குறைந்தபட்சம் இரண்டு கிராம ஊராட்சிகளுக்குச் செல்ல வேண்டும். அவர் பார்வையிடும் கிராம ஊராட்சிகளில் சம்பந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலர்கள் / வேளாண்மை அலுவலர்கள் அல்லது உதவி தோட்டக்கலை அலுவலர்கள் / தோட்டக்கலை அலுவலர்களின் நாட்குறிப்பில் மேலொப்பம் இடவேண்டும். உதவி இயக்குநர்களின் முன் பயணத்திட்டம், முந்தைய மாதம் 30ஆம் தேதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட வேளாண்மை இணை இயக்குநர் / தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர் அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். உதவி இயக்குநர்கள் அவ்வப்போது கிராமங்களுக்கு திடீர் ஆய்வு மேற்கொண்டு விரிவாக்க அலுவலர்களின் செயல்பாடுகளை

அவர்களின் முன் தகவல் பயண அறிக்கையின் அடிப்படையில் சரிபார்க்க வேண்டும்.

3. **இணை இயக்குநர் / துணை இயக்குநர்:** அனைத்து வேளாண்மை / தோட்டக்கலை இணை இயக்குநர்கள், வேளாண்மை/ தோட்டக்கலை துணை இயக்குநர்கள் வாரத்திற்கு குறைந்தபட்சம் 3 முறையாவது கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும். வேளாண்மை இணை இயக்குநர் / துணை இயக்குநர்/ தோட்டக்கலை இணை இயக்குநர் / தோட்டக்கலை துணை இயக்குநர்கள் கிராமங்களுக்குச் சென்று சம்பந்தப்பட்ட விரிவாக்க அலுவலர்களின் வருகையை உறுதி செய்திட வேண்டும். மேலும் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை பற்றி விவசாயிகளிடம் கலந்துரையாடல் செய்திடல் வேண்டும்.

**ஆ. உழவர் – அலுவலர் தொடர்புத் திட்டத்தினை தகவல் தொடர்பு சாதனத்தின் மூலம் கண்காணித்தல்**

i). வழக்கமான களப்பயணங்கள் மற்றும் கண்காணிப்புடன், உதவி வேளாண்மை அலுவலர்கள் / உதவி தோட்டக்கலை அலுவலர்கள், வேளாண்மை அலுவலர்கள் / தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களின் உபயோகத்திற்காக **ஒரு பிரத்யேக கைபேசி செயலி உருவாக்கப்படும்.**

ii). அந்த செயலியில் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிக்கு பயணம் மேற்கொண்ட விபரங்களை பதிவேற்றம் செய்திட வசதிகள் ஏற்படுத்தப்படும்.

iii). வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில், உதவி வேளாண்மை அலுவலர்கள் / உதவி தோட்டக்கலை அலுவலர்கள், வேளாண்மை அலுவலர்கள் / தோட்டக்கலை அலுவலர்கள் மேற்கொண்ட பயணம், மேற்கொள்ளத் தவறிய களப்பயணம், விவசாயிகள் முன்வைத்த பிரச்சனைகள் மற்றம் கண்காணிப்பு அலுவலர்களின் ஆய்வு உள்ளிட்டவை குறித்து இணைய முகப்பு தகவல் (dash board) உருவாக்கப்படும்.

iv). உதவி வேளாண்மை அலுவலர் / உதவி தோட்டக்கலை அலுவலர் மற்றும் வேளாண்மை அலுவலர் / தோட்டக்கலை அலுவலர் எவரேனும் களப்பயணம் மேற்கொள்ளத் தவறினால், சம்பந்தப்பட்ட மாவட்ட இணை இயக்குநர்கள் / துணை இயக்குநர் மற்றும் இயக்குநரகத்தில் உள்ள மண்டல அதிகாரிகள் காரணங்களை கேட்டறிய வேண்டும். குறிப்பிட்ட அலுவலர் தொடர்ச்சியாக களப்பயணம் செய்யத் தவறினால், அவர் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

17/11/2020
பிரிவு அலுவலர்.
17/11/2020